சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்

முன்னிலை: திரு. P. மகேந்திர வர்மா, B.A., B.L.,
சார்பு நீதிபதி, சங்கரன்கோவில்

2026-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28-ஆம் நாள் சனிக் கிழமை
(திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீ விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 14 ஆம் நாள்)

அசல் வழக்கு எண்.336/2024
(CNR.No.TNTS07-000861-2023)
****

பி.கணேசன் ... வாதி

/எதிர்/

ஆணையாளர் அவர்கள்,
நகராட்சி அலுவலகம்,
புளியங்குடி ...பிரதிவாதி

இவ்வழக்கானது 18.02.2026 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்தபொழுது, வாதி தரப்பில் வாதியே தனக்காக நேரில் ஆஜராகியும், (party in-person) பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திருவாளர்ஆர்.குகன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லாததாலும், பிரதிவாதியை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாமலும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமலும் இருந்து வந்ததால் பிரதிவாதியானவர் ஒருதலைபட்சமாக வைக்கப்பட்டும், வாதி தரப்பில் முன்னிடப்பட்டிருக்கும் வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், வாதி தரப்பு வாதுரையை கேட்டும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

தீர்ப்புரை

இந்த வழக்கானது, வாதிக்கு நஷ்ட ஈடாக ரூ.1,01,000/-ம் பிரதிவாதி வழங்கக்கோரியும், மற்றும் செலவுத் தொகை வழங்க கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **வாதியின் வழக்குரையின் சுருக்கம்**:-

வாதி தரைதளம் வீடு 1994 லும், மாடி வீடு 1997 லும் நகராட்சி அனுமதி பெற்று கட்டி முடிக்கப்பட்டது. தரைதளம் வீட்டிற்கு 1994-1995 முதலாவது அரையாண்டு முதல் 1998-1999 மதலாவது அரையாண்டு வரை அரையாண்டு வரி ரூ.27/- விதித்து வசூல் செய்யப்பட்டிருக்கிறது. மேலும் தரைதளம் வீட்டிற்கு 1998 ன் நகராட்சி சொத்துவரி சீராய்வின் படி 25% சதவீதம் வரி உயர்வு செய்து 1998-1999 இரண்டாம் அரையாண்டு முதல் 1999-2000 இரண்டாம் அரையாண்டு வரை அரையாண்டு வரி ரூ.35/- வசூல் செய்யப்பட்டிருக்கிறது. அதுபோல் மாடி வீட்டிற்கும் அரையாண்டு வரி ரூ.35/- வசூல் செய்யப்பட்டிருக்கிறது. மாடி வீட்டிற்கு அரையாண்டு வரி ரூ.35/- 24.03.199 ல் வசூல் செய்ததாக தகவல் வழங்கியிருக்கிறார்கள்.

2.2. வாதி வீட்டு எண்.1 க்கு 1999-2000 முதல் அரையாண்டிற்கு இரண்டாம் அரையாண்டிற்கு 35 + 35 = 70 செலுத்தி பின்னும் மீண்டும் 1999-2000 இரண்டாம் அரையாண்டிற்கு 20.12.1999 ல் வாதிக்கு வேண்டாதவன் பேச்சைக் கேட்டு பில் கலெக்டர் துளசிநாதன் தூண்டுதலினால் பிரதிவாதி அரையாண்டு வரி ரூ.354/- என்று விதித்தார்கள். வாதி பல ஆட்சேபனை மனு பதிவு தபால் மூலம் தெரிவித்தும் மேற்படி ஆட்சேபனை மனு மீது நடவடிக்கை எடுக்காமல் பில் கலெக்டர் துளசிநாதன் வாதி உறவினர் மாமனாரிடம் 31.03.2000 ல் ரூ.354/- வசூல் செய்துவிட்டார். சிவகிரி நீதிமன்ற அசல் வழக்கு எண்.56/2000 வழக்கு விசாரணையின்போது வாதி உறவினர் மாமனாரிடம் ரூ.354/- வசூல் செய்ததாக வாக்குமூலம் அளித்திருக்கிறார். அசல் வழக்கு எண்.19/2015 வழக்கிலும் வாதி மாமனார் எழுதிக்கொடுத்த ஆவணத்தின் நகல் தாக்கல் செய்திருக்கிறார்.

2.3. 20.12.1999 ல் வாதி வீட்டிற்கு சட்டத்திற்கு புறம்பாக வரி விதித்து வசூல் செய்ததால் சிவகிரி நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.56/2000 வழக்கு தொடர்ந்தார். 20.12.1999 ல் விதித்த வரி ரூ.354/- சட்டத்திற்கு புறம்பானது என்று அவ்வரி செல்லாது என்றும், வசூல் செய்யக்கூடாது என்றும் வாடகை கட்டுப்பாட்டு சட்டம் 1960 பிரிவு 4 ன் படி ஆண்டு வாடகை மதிப்பு நிர்ணயம் செய்து சட்டத்திற்குட்பட்டு வரி நிர்ணயம் செய்து வரி விதிப்பு அறிவிப்பை வாதிக்கு அனுப்பி வாதியின் ஆட்சேபனையை ஏற்று வரி நிர்ணயம் செய்ய வேண்டுமென்று சிவகிரி நீதிமன்றம் 07.10.2000 ல் தீர்ப்பு வழங்கியது. மேலும் பிரதிவாதி சங்கரன்கோவில், சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு வழக்கு எண்.210/2004 தாக்கல் செய்தார். அதில் விசாரணை நீதிமன்றம் சிவகிரி நிதிமன்ற தீர்ப்பை உறுதி செய்து மேல்முறையீடு வழக்கை 31.10.2006 ல் தள்ளுபடி செய்தது.

2.4. பிரதிவாதி 18.12.2013 ல் வாதி மாடி வீட்டிற்கு மட்டும் வீட்டு எண்.1 பி என்றும், அரையாண்டு வரி ரூ.125/- என்று விதித்தார்கள். வாதி மாடி வீடு 1997 ல் கட்டி முடிக்கப்பட்டது என்றும், நகராட்சியின் 1993 ன் சீராய்வின்படி வரி விதிக்க வேண்டுமென்று ஆட்சேபனை தெரிவித்தார். மேற்படி ஆட்சேபனை மனு மீது நடவடிக்கை எடுக்காததால் 13.02.2014 ல் நினைவூட்டல் மனு கொடுத்தார். பிரதிவாதி வாதி மீது கோபம் கொண்டு வாதியை எப்படியாவது கெடுத்தே தீரவேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் வாதி வீட்டு எண்.1 க்கு 13.02.2014 பிற்பகலில் 10.02.2014 தேதியிட்டு அரையாண்டு வரி ரூ.1370/- என்று நிர்ணயம் செய்து 1999-2000 இரண்டாம் அரையாண்டு முதல் 2013-2014 இரண்டாம் அரையாண்டு முடிய மொத்த வரி பாக்கி ரூ.40,752/- நிலுவையில் உள்ளது என்று தெரிவித்து வரிவிதிப்பு அறிவிப்பை வாதி வீட்டு சுவரில் ஒட்டி வாதியை கேவலப்படுத்தினார். அதன் பின் வாதி வீட்டில் ஒட்டிய நகலை தபால் மூலம் அனுப்பினார்கள்.

2.5. பின்பு 10.02.2014 ஆம் தேதியிட்டு வாதி வீட்டிற்கு அரையாண்டு வரி ரூ.1370/- விதித்தது அநீதியானதால் 20.02.2014 ல் ஆட்சேபனை மனுவும் 07.03.2014 ல் மேல்முறையீட்டு குழுமத்திற்கும் பதிவு தபால் மூலம் ஆட்சேபனை தெரிவித்தனர். மேற்படி ஆட்சேபனை மனு மீதும் நடவடிக்கை எடுக்காததால் சிவகிரி நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.19/2015 வழக்கு தொடரப்பட்டது. மேற்படி வழக்கில் வாதி 10.02.2020 ல் சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்தார். மேற்படி வழக்குக்கு தேவையான சாட்சியங்களை நிரூபிக்க வேண்டும் என்பதற்காக பிரதிவாதியிடமும் பொது தகவல் அலுவலரிடமும் வாதி இந்திய சாட்சி சட்டம் 1872 பிரிவு 76 ன் கீழ் கேட்ட நகல்களும் தகவல் அறியும் உரிமை சட்டம் 2005 ன் படி தகவல் கேட்ட நகல் வழங்காததால் மேற்படி வழக்கின் இடைநிலைமனு மூலம் வாதி கேட்டுள்ள நகல்களை கொண்டுவர உத்தரவிடவேண்டி 18.03.2021 ல் தாக்கல் செய்த மனுவில் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தும் எதிர்தரப்பு வழக்கறிஞர் எந்தவித நகல்களும் தாக்கல் செய்யாமல் எட்டு வருடங்களாக வழக்கு நடந்தது. கடைசியாக சில வாய்தாக்களில் எதிர்தரப்பு வழக்கறிஞர் ஆஜராகவில்லை. சிவகிரி நீதிமன்றம் 10.02.2014 ஆம் தேதியிட்டு விதித்த வரி ரூ.1370/- செல்லாது என்று 17.02.2023 ல் தீர்ப்பு வழங்கியது.

2.6. பிரதிவாதி, வாதியை கெடுக்கவேண்டும் என்பதற்காகவே சட்டத்திற்கு புறம்பாக பலமுறை வரிவிதித்து பல கஷ்ட நஷ்டங்கள் மன உளைச்சல் மற்றும் அவமானம் ஆகியவற்றை ஏற்படுத்தியதால் பிரதிவாதி, வாதிக்கு நஷ்ட ஈடாக ரூ 1,01,000/-ம் வழங்க வேண்டியும், வாதி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து வழக்கு வகைகளுக்கு செலவாகும் தொகைக்கும் தாங்களே பொறுப்பாவீர்கள் என்று 27.06.2023 இல் அறிவிப்பு நோட்டீஸ் அனுப்பினார். பிரதிவாதி அறிவிப்பு நோட்டீசை 28.06.2023 பெற்றுக்கொண்டு அறிவிப்பு நோட்டீஸில் கேட்டுள்ளபடி கொடுக்கவில்லை. எனவே இவ்வழக்கு

3. பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகியிருந்த நிலையிலும், பிரதிவாதியை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாமலும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமலும் இருந்து வந்ததால் பிரதிவாதி ஒருதலைபட்சமாக வைக்கப்பட்டுள்ளார்.

4. **இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில்,**

பிரதிவாதி வாதிக்கு நஷ்ட ஈடாக *ரூ.1,01,,000/-ஐ- செலுத்தக் கடமைப்பட்டவரா?*

என்பதேயாகும்.

5. வாதி தரப்பில், வாதி கணேசன் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ஷையார் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில் யாதொரு சாட்சிய, சான்றாவணங்களும் முன்னிறுத்தப்படவில்லை. வாதி தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

6. **தீர்வு:**

இந்த வழக்கானது, வாதிக்கு நஷ்ட ஈடாக ரூ.1,01,000/-ம் பிரதிவாதி வழங்கக்கோரியும், மற்றும் செலவுத் தொகை வழங்க கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. வாதி தரப்பில் விசாரணை செய்யப்பட்ட வா.சா.1 தனது சாட்சியத்தில், வாதியின் வீட்டு எண்.1 க்கு 1999 ஆம் ஆண்டு இரண்டாம் அரையாண்டிற்கு 20.12.1999 இல் வரியாக ரூ.354/- விதிக்கப்பட்டது என்றும், அதற்கு எதிராக வாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது என்றும், ஆனால் ஆட்சேபனை மீது நடவடிக்கை எடுக்காமல் பில் கலெக்டர் துளசிநாதன் 31.03.2000 இல் ரூ.354/ வசூலித்துவிட்டார் என்றும், பின்னர் 20.12.1999 இல் வாதியின் வீட்டிற்கு சட்டத்திற்கு புறம்பாக வரிவிதித்து வரி வசூல் செய்ததால் சிவகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.56/2000 ம் என்ற வழக்கு தொடரப்பட்டு மேற்படி வழக்கில்

20.12.1999 இல் விதிக்கப்பட்ட வரி ரூ.354/-ஆனது சட்டத்திற்கு புறம்பானது என்றும், வாடகை கட்டுப்பாட்டு சட்டம் 1960 பிரிவு 4 ன் படி வாடகை மதிப்பு நிர்ணயம் செய்யப்படவேண்டும் என்று 07.10.2000 இல் சிவகிரி நீதிமன்றத்தால் தீர்ப்பு வழுங்கப்பட்டது என்றும், பிரதிவாதி சட்டத்திற்கு புறம்பாக வரி விதித்ததால் மேற்படி அசல் வழக்கு எண்.56/2000 ம் தாக்கல் செய்ததன் காரணமாக வாதி பல்வேறு கஷ்ட நஷ்டங்களை சந்தித்தார் என்றும், மேலும் பிரதிவாதி மேற்படி அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் மேல் முறையீடு A.S.No.210/2004 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மேல்முறையீட்டிலும் சிவகிரி நீதிமன்ற தீர்ப்பு உறுதி செய்யப்பட்டு மேல்முறையீட்டு வழக்கானது 31.10.2006 ஆம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், மேற்படி மேல்முறையீட்டு வழக்கு நடத்தியதன் காரணமாக வாதி பல்வேறு கஷ்ட நஷ்டங்களை சந்தித்தார் என்றும், இந்நிலையில் பிரதிவாதி 18.12.2013 இல் வாதியின் மாடி வீட்டு எண்.1 பி க்கு அரையாண்டிற்கு ரூ.125/- என வரி விதித்தார் என்றும், மாடி வீடு 1997 இல் கட்டி முடிக்கப்பட்டது என்பதால் 1993 ஆம் ஆண்ணடு சீராய்வின் படி வரி விதிக்கவேண்டும் என்று ஆட்சேபனை செய்திருந்தும் பிரதிவாதி நடவடிக்கை எடுக்காததால் வாதி 13.02.2014 இல் நினைவூட்டல் மனு கொடுத்திருந்தார் என்றும், அதன் காரணமாக பிரதிவாதி, வாதி மீது கோபம் கொண்டு வீட்டு எண்.1 பிக்கு 13.02.2014 இல் பிற்பகல் 10.02.2014 ஆம் தேதியிட்டு அரையாண்டு வரை ரூ.1370/- என நிர்ணயம் செய்து 1999 – 2000 ஆம் அரையாண்டு முதல் 2013-2014 2 ஆம் அரையாண்டு முடிய மொத்த வரி தொகை ரூ.40,750/- நிலுவையில் இருப்பதாக அறிவிப்பை வாதியின் வீட்டு சுவரில் ஒட்டி வாதியை அவமானப்படுத்தினார் என்றும், அதன் காரணமாக வாதி மற்றும் அவரது குடும்பத்தினர் மிகுந்த துயரம் அடைந்தனர் என்றும், மேலும் மேற்படி வரிவிதிப்பை எதிர்த்து மேல்முமுறையீட்டு குழுமத்திற்கு ஆட்சேபனை தெரிவித்ததாகவும், அதன் மீது நடவடிக்கை எடுக்காததால் சிவகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.19/2015 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கு 8 வருடங்கள் இழுத்தடிக்கப்பட்டு இறுதியாக சிவகிரி நீதிமன்றத்தால் 10.12.2014 இல் விதிக்கப்பட்ட வரி ரூ.1370/-ஆனது செல்லாது என கடந்த 17.02.2023 இல் தீர்ப்பு வழங்கப்பட்டது என்றும், மேற்படி அசல் வழக்கு 19/2015 என்ற

வழக்கினை வாதி நடத்தி கஷ்ட நஷ்டங்களை அடைந்தார் என்றும், எனவே பிரதிவாதி, வாதியை கஷ்டப்படுத்தவேண்டும் என்றே சட்டத்திற்கு புறம்பாக பல முறை வரிவிதித்து அதன் காரணமாக வாதிக்கு மன உளைச்சல், அவமானம் ஏற்படுத்தியதால் பிரதிவாதி வாதிக்கு நஷ்ட ஈடாக ரூ.1,01,000/-ம் வழங்கவேண்டும் என வாதியால் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

8. மேலும், வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்களில் வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலிக்கையில் 24.03.1999 ஆம் தேதி வாதியின் தரைதள வீட்டிற்கு வரி செலுத்தியதற்கான வரி ரசீது நகல் என்பதை அறியமுடிகிறது. வா.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலிக்கையில் 24.03.1999 ஆம் தேதி வாதியின் மாடி வீட்டிற்கு வரி வசூல் செய்ததாக புளியங்குடி நகராட்சியால் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட தகவல் ஆவணத்தின் நகல் என்பதை அறியமுடிகிறது. வா.சா.ஆ.3 ஆவணத்தை பரிசீலிக்கையில் 07.07.2016 ஆம் தேதி வாதியின் உறவினர் மாமனார் வரி செலுத்தியதற்கு எழுதிக்கொடுத்த ஆவணம் என்பதை அறியமுடிகிறது. வா.சா.ஆ.4 சிவகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.56/2000 இன் தீர்ப்புரையை பரிசீலிக்கையில் 07.10.2000 ஆம் தேதியன்று சிவகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.56/2000 என்ற வழக்கில் 20.12.1999 இல் விதிக்கப்பட்ட வரி ரூ.354/-ஆனது சட்டத்திற்கு புறம்பானது என்றும், வாடகை கட்டுப்பாட்டு சட்டம் 1960 பிரிவு 4 ன் படி வாடகை மதிப்பு நிர்ணயம் செய்யப்படவேண்டும் என்று வழங்கப்பட்ட தீர்ப்பு என்பதை அறியமுடிகிறது. வா.சா.ஆ.5 சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் மேல் முறையீடு வழக்கு எண்.210/2004 இன் தீர்ப்புரையை பரிசீலிக்கையில் மேற்படி அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் மேல் முறையீடு வழக்கு எண்.210/2004 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மேல்முறையீட்டிலும் 31.10.2006 ஆம் தேதியன்று சிவகிரி நீதிமன்ற தீர்ப்பு உறுதி செய்யப்பட்டு மேல்முறையீட்டு வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது. வா.சா.ஆ.6 ஆவணத்தை பரிசீலிக்கையில் 18.12.2013

ஆம் தேதியன்று புளியங்குடி நகராட்சியால் வாதி வீட்டு மாடிக்கு வரி விதிக்கப்பட்டதற்கான அறிவிப்பு என்பதை அறியமுடிகிறது. வா.சா.ஆ.7 ஆவணத்தை பரிசீலிக்கையில் சிவகிரி நீதிமன்ற அசல் வழக்கு எண்.19/2015 என்ற வழக்கில் வாதியால் தாக்கல் செய்யப்பட்ட சத்தியபிரமான வழக்குமூலம் என்பதை அறியமுடிகிறது. வா.சா.ஆ.8 ஆவணத்தை பரிசீலிக்கையில் சிவகிரி நீதிமன்ற அசல் வழக்கு எண்.19/2015 என்ற வழக்கில் வாதியால் தாக்கல் செய்யப்பட்ட இடைநிலை மனு என்பதை அறியமுடிகிறது. வா.சா.ஆ.9 சிவகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.19/2015 இன் தீர்ப்புரையை பரிசீலிக்கையில், 17.02.2023 ஆம் தேதியன்று சிவகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.19/2015 என்ற வழக்கில் வாதிக்கு எதிராக 10.12.2014 இல் விதிக்கப்பட்ட வரி ரூ.1370/-ஆனது செல்லாது என தீர்ப்பு வழங்கப்பட்டது என்பதை அறியமுடிகிறது. வா.சா.ஆ.10 ஆவணத்தை பரிசீலிக்கையில் 30.09.2021 ஆம் தேதியன்று பிரதிவாதி, வாதிக்கு அனுப்பிய அறிவிப்பு என்பதை அறியமுடிகிறது. வா.சா.ஆ.11 ஆவணத்தை பரிசீலிக்கையில் 27.06.2023 ஆம் தேதியன்று வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு என்பதை அறியமுடிகிறது. வா.சா.ஆ.12 ஆவணத்தை பரிசீலிக்கையில் 28.06.2023 ஆம் தேதியன்று வாதி அனுப்பிய அறிவிப்பை, பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை என்பதை அறியமுடிகிறது.

9. மேற்படி வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் பரிசீலனையிலிருந்து, வாதியின் வீட்டு எண்.1 க்கு 1999-2000 க்கான 2 ஆம் அரையாண்டிற்கு 20.12.1999 இல் அரையாண்டு வரியாக ரூ.354/- விதித்ததாகவும், அதற்கு ஆட்சேபனை செய்யப்பட்டும் நடவடிக்கை எடுக்காததால் அதன்பேரில் சிவகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில், அசல் வழக்கு எண்.56/2000 என்ற வழக்கானது தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கில் நகராட்சி அலுவலகத்தால் விதிக்கப்பட்ட வரிவிதிப்பு தவறானது என்று தீர்ப்பு வழங்கப்பட்டது என்றும், மேலும் அதனை எதிர்த்து நகராட்சி அலுவலகத்தால் சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண்.210/2004 தாக்கல் செய்யப்பட்டு மேற்படி

மேல்முறையீடு 31.10.2006 இல் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றும், மேலும் வாதியின் வீட்டு எண்.1 க்கு 13.12.2014 பிற்பகலில் 10.02.2014 தேதியிட்டு அரையாண்டு வரி ரூ.1,370/- என நிர்ணயம் செய்து 1999-2000 முதல் 2013-2014 இரண்டாம் அரையாண்டுவரை வரி நிலுவைத் தொகை ரூ.40,752/- என வாதியின் வீட்டு சுவரில் அறிவிப்பு ஒட்டப்பட்டது என்றும், அதன் காரணமாக வாதிக்கு அவமானம் ஏற்பட்டது என்றும், மேலும் வரிவிதிப்பை எதிர்த்து சிவகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.19/2015 தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கு கடந்த 8 வருடங்களாக நடைபெற்று கடந்த 17.02.2023 ஆம் தேதியன்று வரிவிதிப்பு செல்லாது என்று தீர்ப்பு வழங்கப்பட்டது என்றும், மேற்படி புளியங்குடி நகராட்சி அலுவலகத்தால் வாதிக்கு வேண்டுமென்றே சட்டவிரோதமாக கூடுதல் வரிவிதிப்பு செய்யப்பட்டதாலும், மேலும் சிவகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.56/2000, சங்கரன்கோவில் சார்பு நீதிமன்ற மேல்முறையீட்டு வழக்கு எண்.210/2004 மற்றும் மற்றொரு சிவகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.19/2015 ஆகிய வழக்குகளை நடத்தியதன் காரணமாக வாதிக்கு மன உளைச்சலும், இழப்பீடும் ஏற்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

10. எனவே மேற்சொன்ன காரணங்களின் அடிப்படையில் வாதிக்கு புளியங்குடி நகராட்சி இழப்பீடு வழங்க உத்தரவிடப்படவேண்டுமா என்பதை பொருத்து பரிசீலனை செய்கையில், நகராட்சி நிர்வாகம் வரிவிதிப்பு செய்வது என்பது அவர்களின் கடமையாகும். அதில் கூடுதல் வரிவிதிப்பு செய்யப்பட்டது என்பதற்காக வாதிக்கு எதிராக வேண்டுமென்றே நகராட்சி நிர்வாகத்தால் கூடுதல் வரிவிதிப்பு செய்யப்பட்டதாக கருதமுடியாது. மேலும் வாதிக்கு எதிராக நகராட்சி நிர்வாகம் வேண்டுமென்றே கூடுதல் வரிவிதிப்பு செய்துள்ளது என்பதை வாதி தரப்பில் நிரூபிக்கப்படவில்லை. மேலும் வரிவிதிப்பினை எதிர்த்து வாதியால் தொடரப்பட்ட சிவகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.56/2000 மற்றும் அதன் பேரில் மேற்படி வழக்கிற்கு எதிராக பிரதிவாதி நகராட்சியால் தாக்கல் செய்யப்பட்ட சங்கரன்கோவில் சார்பு நீதிமன்ற மேல்முறையீட்டு வழக்கு எண்.210/2004 மற்றும் வாதியால் தாக்கல் செய்யப்பட்ட மற்றொரு சிவகிரி

மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.19/2015 ஆகிய வழக்குகளை நடத்தியதன் காரணமாக வாதிக்கு மன உளைச்சலும், இழப்பீடும் ஏற்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் ஏற்கத்தக்கதாக இல்லை என இந்நீதின்றம் தீர்மானிக்கிறது.

11. எனவே மேலே கண்ட பரிசீலனைகளிலிருந்து பிரதிவாதி நகராட்சியால் வாதிக்கு எதிராக வேண்டுமென்றே கூடுதல் வரிவிதிப்பு செய்யப்பட்டது என்ற காரணத்திற்காகவும், மேலும் நகராட்சியால் விதிக்கப்பட்ட வரிவிதிப்பினை எதிர்த்து வாதியால் தொடரப்பட்ட சிவகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.56/2000 மற்றும் அதன் பேரில் மேற்படி வழக்கிற்கு எதிராக பிரதிவாதி நகராட்சியால் தாக்கல் செய்யப்பட்ட சங்கரன்கோவில் சார்பு நீதிமன்ற மேல்முறையீட்டு வழக்கு எண்.210/2004 மற்றும் வாதியால் தாக்கல் செய்யப்பட்ட மற்றொரு சிவகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.19/2015 ஆகிய வழக்குகளை நடத்தியதன் காரணமாக வாதிக்கு மன உளைச்சல் ஏற்பட்டுள்ளது என்ற காரணத்திற்காகவும் பிரதிவாதி நகராட்சி வாதிக்கு இழப்பீடு வழங்கவேண்டும் என்று கோரியுள்ள ஏற்கத்தக்கதல்ல என்பதால் பிரதிவாதி நகராட்சி வாதிக்கு இழப்பீடு தர கடமைப்பட்டதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

12. இறுதியாக, இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28 ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MAHINDRAVARMA P

Digitally signed by MAHINDRAVARMA P
Date: 2026.03.28 20:19:28 -0300

சார்பு நீதிபதி,

சங்கரன்கோவில்.

வாதி தரப்பு சாட்சிகள்:

1. திரு. கணேசன் (வாதி)

பிரதிவாதி தரப்பு சாட்சிகள்: இல்லை

வாதி தரப்பு சான்றாவணங்கள்:

வா.சா.ஆ.1	24.03.1999	தரைதள வீட்டிற்கு வரி செலுத்தியதற்கான வரி ரசீது நகல்
வா.சா.ஆ.2	24.03.1999	மாடி வீட்டிற்கு வரி வசூல் செய்ததாக புளியங்குடி நகராட்சியால் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட தகவல் ஆவணத்தின் நகல்
வா.சா.ஆ.3	07.07.2016	வாதியின் மாமனார் எழுதி கொடுத்த ஆவணம் நகல்
வா.சா.ஆ.4	07.10.2004	சிவகிரி நீதிமன்றத்தால் அசல் வழக்கு எண்.56/2000 வழக்கிற்கு வழங்கப்பட்ட தீர்ப்புரை நகல்
வா.சா.ஆ.5	31.10.2006	சங்கரன்கோவில் நீதிமன்றத்தால் A.S.No.210/2004 ல் வழங்கப்பட்ட தீர்ப்புரை நகல்
வா.சா.ஆ.6	18.12.2013	புளியங்குடி நகராட்சியால் மாடிக்கு வரி விதிக்கப்பட்டதற்கான அறிவிப்பு நகல்
வா.சா.ஆ.7	10.12.2020	சிவகிரி நீதிமன்றத்தில் வாதி தாக்கல் செய்த சத்தியபிரமாண வாக்குமூலம் நகல்
வா.சா.ஆ.8	18.03.2021	சிவகிரி நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.19/2015 ல் வாதி தாக்கல் செய்த இடைகால மனுவின் நகல்
வா.சா.ஆ.9	17.02.2023	சிவகிரி நீதிமன்றம் வழங்கிய அசல் வழக்கு எண்.19/2015 இல் வழங்கப்பட்ட தீர்ப்புரையின் சான்றிட்ட நகல்
வா.சா.ஆ.10	30.09.2021	பிரதிவாதி, வாதிக்கு அனுப்பிய அறிவிப்பு நகல்
வா.சா.ஆ.11	27.06.2023	வாதி அனுப்பிய அறிவிப்பு நோட்டீஸை வாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை நகல்

வா.சா.ஆ.12	28.06.2023	வாதி அனுப்பிய அறிவிப்பு நோட்டீசை வாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை நகல்

<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்</u>: இல்லை

MAHINDRAVARMA P Digitally signed by MAHINDRAVARMA P Date: 2026.03.28 20:19:36 -0300

சார்பு நீதிபதி,

சங்கரன்கோவில்.

சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்

அசல் வழக்கு எண்.336/2024

தீர்ப்புரை (அசல்/வரைவு)

நாள் 28.03.2026